**<u>இலங்கை புகையிரத திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில் நுட்பம் பிரிவு 2 சேவை தரத்தின் புகையிரத தொழில்நுட்ப முகாமைத்துவ உதவியாளர் இயந்திரம் மற்றும் புகையிரத தொழில்நுட்ப உதவியாளர் மின் பதவிகளின் 111ம் தரத்திற்கு சேர்த்துக் கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை. - 2017</u>**

1.கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு பயிற்சி காலத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு தகுதியுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

- புகையிரத தொழில்நுட்ப முகாமைத்துவ உதவியாளர் இயந்திரம் வெற்றிடம் 154
- புகையிரத தொழில்நுட்ப முகாமைத்துவ உதவியாளர் மின் வெற்றிடம் 43

2. புகையிரத பொது முகாமையாளரினால் நடாத்தப்படும் எழுத்து மூல போட்டிப் பரீட்சையில் விண்ணப்பதாரிகள் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் திறமையின் வரிசைப்படி நிலவும் வெற்றிடத்தைப் போன்று இரு மடங்கு விண்ணப்பதாரிகள் தகைமைகளை பரிசீலிக்கும் நேரமுகப் பரீட்சைக்கு உட்படுத்தி போட்டிப் பரீட்சையிலும் தகைமைகளை பரிசீலிக்கும் நேர்முகப் பரீட்சையிலும் பெற்ற புள்ளிகளின் திறமையின் வரிசைப்படி நிழவும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

3. வயதெல்லை :-

விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசி தினத்தன்று வயது வருடம் 18 க்கு குறையாமலும் 45 க்கு கூடாமலும் இருத்தல் வேண்டும்.

4. ஆட்சேர்ப்பு நிபந்தனை :-

முதலில் ஒரு வருட கால பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்து அப் பயிற்சியை திருப்பதிகரமாக நிறைவு செய்யும் சேவையாளர்கள் 111ம் வகுப்புக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

பயிற்சி காலத்திற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான தராதரம்.

கல்வி தராதரம்:- சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மொழி, கணிதம் மற்றும் இரு விடயங்களில் திறமை சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) விடயங்களில் கல்வி பொது தராதர ( சாதாரன தர) பரீட்சையில் சித்தியடைநதிருத்தல்.

உடன்

கல்வி பொது தராதர (உயர் தர) பரீட்சையில் விஞ்ஞான பிரிவில் சகல விடயங்களிலும் (பொது அறிவு விடயம் தவிர்ந்த) சித்தியடைந்து மூன்றாம் நிலை கல்வி பாடநெறியை கற்பதற்கு தேவையான தராதரத்தை பெற்றிருத்தல் பழைய விடய உள்ளடக்கத்தின் கீழ் மூன்று விடயங்களில் ஓரெ தடவையில் சித்தியடைந்திருந்தல் போதுமானதாகும்.

2017.06.25 ம் திகதி வரையில் இலங்கை ஜேர்மன் புகையிரத தொழில் நுட்ப பயிற்சி நிறுவனத்தில் பயிற்சி நெறிக்காக சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் மாத்திரம் குறித்த பயிற்சி நெறியை திருப்திகரமான முறையில் நிறைவு செய்தததன் பின்பு வழங்கப்படும் பயிற்சி சான்றிதழை பெற்றிருப்பின் மேலுள்ள கல்வி தராதரம் கருத்திற் கொள்ளாமல் விண்ணப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்படும்.

**தொழில் தராதரம் :-**

இலங்கை ஜேர்மன் புகையிரத தொழில் நுட்ப பயிற்சி நிறுவனத்தில் பதவிக்குரிய கீழ் குறிப்பிடப்படும் பிரிவில் 2½ வருடத்திற்கு குறையாத முழுநேர தொழில்நுட்ப பாடநெறியை கற்று சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

டீசல் என்ஜின் இயந்திரவியலாளர்

பொருத்துனர் பாடநெறி

மின்னியலாளர் (சக்தி) பாடநெறி

இயந்திரவியலாளர் (பொது) பாடநெறி

**5. சம்பள அளவுத்திட்டம் :-**

III ம் வகுப்பு

அரச நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 ன் கீழ் MT-02-2016
ரூபா 30140-10X350-11X370-10X560-10X660-49910/-

<u>பயிற்சி காலவெல்லை</u>

மாதாந்த கொடுப்பனவு : 2018.01.01-2018.12.31 வரை
மாதாந்த கொடுப்பனவு - ( ரூபா 20462/-)
ஒப்பீட்டு கொடுப்பனவு - ( ரூபா 4629/-)

**<u>06.ஆட்சேர்ப்பு முறை :-</u>**

பயிற்சி காலத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யும் எழுத்து மூல பரீட்சை சிங்களம், தமிழ் மொழிகளில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்பு மாற்றம் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது.

விண்ணப்பதாரி பரீட்சையின் போது ஒரே மொழியிலேயே விடையளிக்க வேண்டும்.

பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் சம்பந்தமாக புகையிரத பொது முகாமையாளரினால் இடப்படும் சட்டதிட்டங்களுக்கு விண்ணப்பதாரி உட்பட்டவராகும். அச் சட்ட திட்டங்களை மீறுகின்ற போது புகையிரத பொது முகாமையாளரினால் இடப்படும் தண்டணைகளுக்கு உட்பட நேரிடும்.

- பயிற்சி காலத்திற்க ஆட்சேர்ப்பு செய்யும் எழுத்து மூல பரீட்சையின் விடயங்கள்

  பரீட்சை இரு கேள்வித்தாள்களை கொண்டிருக்கும்.

| தொ.இல | விடயம் | காலம் | உச்ச புள்ளி அளவு | சித்தியடைவதற்கான குறைந்த புள்ளி |
|---|---|---|---|---|
| 01 | பொது அறிவும் நுண்ணறிவும | 01 மணி | 100 | 40 |
| 02 | தொழில்நுட்ப விடயம் | 02 மணி | 100 | 40 |

விடய உள்ளடக்கம்

01. **பொது அறிவும் நுண்ணறிவும்** :- விண்ணப்பதாரி வசிக்கும் மற்றும் சேவை புரியும் சூழல் உட்பட இலங்கை சமூக, பொருளாதார, கலாச்சாரம், அரசியல் பற்றிய அறிவு தேசிய சர்வதேச வகையில் முக்கியமான நவீன விடயங்கள் மற்றும் வரலாற்று விடயம், விஞ்ஞான பௌதீக, தொழில் நுட்ப அபிவிருத்தி போன்றவை சம்பந்தமாக விண்ணப்பதாரி கொண்டுள்ள அறிவையும் தர்க்க ரீதியாக விளக்கமளிக்கும் ஆற்றல், நிகழ்வுகள் பற்றி சரியான தீர்மாணம் எடுக்கும் திறன், பொது அறிவு, மற்றும் புத்திக் கூர்மையை அளவிடும் வகையில் நோக்காக கொண்டு கணித குளறுபாடு, பொது அறிவு மற்றும் சூழல் சம்பந்தமான கேள்விகளை கொண்டமைந்த எழுத்து மூல பரீட்சையாகும்.

02. **தொழில் நுட்ப விடயம்** :- பதவிக்கு ஏற்ப தெரிந்திருக்க வேண்டிய அடிப்படை தொழில் நுட்ப கோட்பாட்டு அறிவை அளவிடும் வகையில் அமைந்த கேள்விகளை கொண்டதாகும்.

- **பயிற்சி காலத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யும் திறனை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சை :-**

  எழுத்து மூல போட்டிப் பரீசையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் பெற்ற புள்ளிகளின் திறமையின் வரிசைப்படி நிலவும் வெற்றிடத்தை போன்று இரு மடங்கு விண்ணப்பதாரிகள் தொகையினர் புள்ளிகள் வழங்கும் நேர்முகப் பரீசைக்கு உட்படுத்தி எழுத்து மூல பரீட்சையினதும் நேர்முகப் பரீட்சையினதும் புள்ளிகள் கூட்டப்பட்டு அதன் திறமையின் வரிசைப்படி விண்ணப்பம் கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் நிலவிய வெற்றிட தொகைக்கு சமமான தொகையினர் ஆசேர்ப்பு செய்யப்படுவர்.

| **புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள்** | **உச்ச புள்ளிகள்** |
|---|---|
| 01. மேலதிக கல்வித் தகைமை<br>கற்றுள்ள ஆங்கிலம்/தமிழ் மொழி, கணனி மற்றும் வேறு பாடநெறிகள் | 20 |
| 02. மேலதிக தொழில் தகைமை | 30 |

| | |
|---|---|
| பதவிக்குரிய கற்றுள்ள வேறு தொழில் பாடநெறி (06 மாதம் மற்றும் 06 மாதத்திற்கு கூடிய பாநெறிகளுக்கு புள்ளிகள் வழங்கப்படும) | |
| 03.பதவிக்கு ஏற்ப பெற்றுள்ள அனுபவம் (ஒரு வருடத்திற்கு 06 புள்ளிகள் விகிதம் உச்சளவு 05 வருடங்கள் கருத்திற் கொள்ளப்படும்) | 30 |
| 04.விஷேட/வெளிவாரி தகுதிகள் (விளையாட்டு/சமூக சேவை போன்றவை | 15 |
| 05.நேர்முகப் பரீட்சையின் போது காட்டும் மனப்பாங்கு, ஆளுமை தன்மை | 05 |
| **மொத்தம்** | 100 |

**பயிற்சி காலத்தின் பின்பு 111 தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்தல் :-**

பயிற்சிக் காலத்திற்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட பயிற்சியாளர்கள் பயிற்சி இறுதியின் பின்பு எழுத்து மூல மற்றும் தொழில் பரீட்சைக்கு உட்படுத்தி சித்தி பெற்றவர்கள் 111 ம் வகுப்புக்கு நியமிக்கப்படுவர். முதல் தடவை பயிற்சி இறுதி பரீசையில் சித்தி பெறாதவர்களுக்கு பின்பு நடாத்தப்படும் பயிற்சி இறுதி பரீட்சை இரண்டிற்கு தோற்ற சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன், அதிலும் சித்தி பெறாதவர்களின் சேவை முடிவுறுத்தப்படும்.

பயிற்சி காலத்தின் பின்பு 111 ம் வகுப்புக்கு சேர்த்துக் கொள்ளும் எழுத்து மூல பரீட்சையின் விடயங்கள் :-

ஒரு கேள்வித்தாளை மாத்திரம் கொண்டிருக்கும்.

| இல | விடயம் | காலம் | உச்ச புள்ளிகள் | சித்தியடைவதற் கான புள்ளி |
|---|---|---|---|---|
| 01 | தொழில்நுட்ப விடயம் | 02 மணி | 100 | 40 |

விடய உள்ளடக்கம் :-

தொழில்நுட்ப விடயம் - பதவிக்குரிய தொழில்நுட்ப விடயம் சம்பந்தமான அறிவை அளவிடம் வகையில் அமைந்த கேள்வித்தாளாகும்.

பயிற்சி காலத்தின் பின்பு 111 ம் வகுப்புக்கு சேர்த்துக் கொள்ளும் தொழில் பரீட்சை

| இல | விடயம் | உச்ச புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|
| 01 | தொழில்நுட்ப விடயம் | 100 | 60 |

விடய உள்ளடக்கம்

**தொழில் நுட்ப விடயம் :-** தேர்ந்தெடுக்கப்பட்ட விடயம் சம்பந்தமாக நிபுனத்துவம், மற்றும் பதவிக்குரிய கோட்பாட்டு அறிவை பிரயோகமாக மற்றும் சரியான முறையில் பயன் படுத்துகின்றாரா என அளவிடும் வகையில் பிரயோக பரிசோதனை நடாத்தப்படும்.

**07. சேவை நிபந்தனை :-**

இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும். ( ஓய்வூதிய திட்டம் சம்பந்தமாக அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியிலான திட்டங்களுக்கு உட்பட வேண்டும்.)

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எப் பகுதியிலேனும் கடமை புரிய உட்பட வேண்டும்.

**சேவை ஒப்பந்தம் சம்பந்தமான விபரம் :-**

பயிற்சி காலத்திற்காக சேர்க்கப்பட்ட 111ம் வகுப்புக்கு நியமிக்கப்படும் சேவையாளர்கள் 111ம் வகுப்புக்கு நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 வருட காலம் கட்டாயமாக புகையிரத திணைக்களத்தில் சேவை புரிதல் வேண்டும். அவ்வாறு 10 வருட சேவைக்கு முன்பு விலகாமலிருப்பதாகவும், அதற்கு முன்பு சேவையிலிருந்து விலகும் போது புகையிரத முகாமையாளரினால் தீர்மானிக்கப்படும் தொகையை திணைக்களத்திற்கு செலுத்துவதற்கு இணங்குவதாக அரச சேவையாளர் பிணை முறி மூலம் இணங்க வேண்டும்.

111ம் வகுப்புக்கு சேர்ந்து 03 வருட காலத்தை தாண்டுவதற்கு முன்பு முதலதவது தடைதாண்டு பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

அரச கரும மொழி அல்லாத மொழியில் சேவைக்கு சேர்ந்தவர்கள் குறிந்த அரச கரும மொழித் தேர்ச்சியை தகுதிகான் காலவெல்லைக்குள் பெறல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அரச சேவையின் நியமனங்களை நிருவகிக்கும் பொது நிபந்தனைகளுக்கும், அரசாங்க சேவை ஆணைக் குழுவின் இலக்கம் PSC/EST/04-01-43/09/2016 – 2017.06.16 திகதியையுடைய இலங்கை புகையிரத திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு -2 சேவைப் பரிவிற்கான ஆட்சேர்ப்பு திட்டத்தில் கூறப்பட்டுள்ள நியதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும், அவ் ஆடசேர்ப்பு திட்டத்திற்கு செய்யப்பட்டுள்ள அல்லது எதிர் காலத்தில் மேற் கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் தாபன விதிக் கோவை மற்றும் நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளுக்கும் இலக்கம் 1589/30 – 2009.02.20 உடைய அதி விஷேட வர்த்தமாணியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக் குழுவின் செயற்பாட்டு நியதிகளுக்கும் திணைக்கள சட்ட திட்டங்களுக்கும் உட்பட வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் குறித்த வைத்திய பரிசோதனைக்கு மேலதிகமாக புகையிரத திணைக்கள உபதேச ஏட்டின் படி விஷேட கண் பார்வை பரிசோதணையிலும் தகுதியுடையவராக காணப்பட வேண்டும்.

08. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :-

விண்ணப்ப பத்திரத்தை பூரணப்படுத்தும் போது மிகவும் கவனமாகவும் சரியான தகவல்களையும் வழங்க வேண்டும். இப் பரீட்சையின் சட்டதிட்டங்களின் படி எவரேனும் விண்ணப்பதாரி தகுதியற்றவரென தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்பு அல்லது பரீட்சை நடக்கும் போது அல்லது பரீட்சையின் பின்பு அல்லது எச் சந்தர்ப்பத்திலும் அவரின் போட்டியிடுகையை இரத்துச் செய்ய முடியுமாகும். விண்ணப்பதாரியினால் முன் வைக்கப்பட்ட தகவல்கள் எச் சந்தர்ப்பத்திலும் பொய்யானதென தெரியவருமிடத்து அவரை அரச சேவையிலிருந்து நீக்க முடியுமாகும். விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படல் அவர் பரீட்சைக்கு தோற்ற தகுதி பெற்றுள்ளார் என கருதப்பட மாட்டாது.

## 09. பரீட்சைக் கட்டணம் :-

பரீட்சைக் கட்டணம் ரூபா 750.00 ஆகும். இத் தொகையை விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் தினத்திற்கு முன்பு புகையிரத பொது முகாமையாளரின் மக்கள் வங்கியின் நகர மத்திய கிளை கணக்கு இலக்கம் 176-100129027-313 வரவிடும் வகையில் எந்த மக்கள் வங்கி கிளையிலும் செலுத்த முடியுமாகும். அதற்காக வழங்கப்படும் பற்றுச் சீட்டினை விண்ணப்ப படிவத்தின் குறித்த இடத்தில் களன்று விடாதவாறு ஒட்ட வேண்டுமாகும். ( பற்றுச் சீட்டின் புகைப்பட பிரதியை எதிர்கால பிரயேசனத்திற்காக தம்மிடம் வைத்துக் கொள்ளவும்) எக் காரணத்திற்காகவும் பரீட்சைக் கட்டணம் மீள செலுத்தப்படாததுடன் காசுக் கட்டளை மற்றும் முத்திரைகள் ஏற்றுக் கொள்ளபட மாட்டாது.

## 10. விண்ணப்பினககும் முறை :-

(அ). விண்ணப்பபடிவம் இவ் அறிவித்தலில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு ஏற்புடையதாக இருக்க வேண்டியதுடன், அது கடதாசியின் இரு பக்கங்களையும் பயன் படுத்தி ஏ4 அளவுள்ள கடதாசியில் விண்ணப்ப படிவத்தின் தலைப்பு இலக்கம் 1.0 இலிருந்து 2.12 வரை முதலாம் பக்கத்திலும், 3.0 இலிருந்து 5.0 வரை அதன் மறு பக்கத்திலும் மிகுதமானவை மூன்றாம் பக்கத்திலும் அமையும் வகையில் தமது விண்ணப்படிவத்தை தயாரிப்பதில் விஷேட கவணம் செலுத்த வேண்டும். இதற்காக வேண்டி கணனி மூலம் மற்றும் தட்டச்சு மூலம் தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தை பயன்படுத்த முடியுமாகும். விண்ணப்ப பத்திரத்தில் கேட்கப்பட்டுள்ள தகவல்களை தமது கையெழுத்து மூலமே பூரணப்படுத்த வேண்டும். மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படாத விண்ணப்ப படிவங்களும், சரியான முறையில் பூரணப்படுத்தப்படாத பூரணமற்ற வகையில் உள்ள விண்ணப்ப படிவங்களும் எவ் அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்ப படிவத்தின் புகைப்பட பிரதி ஒன்றை வைத்துக் கொள்ளல் உமக்கு பிரயோசனப் படக் கூடியதாக இருக்கும். மேலும் பூரணப்படுத்தும் விண்ணப்ப படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்ப படிவத்திற்கு ஏற்புடையதா வென்று விண்ணப்பதாரி உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அவ்வாறு இல்லாத விடத்து விணணப்ப படிவம் நிராகரிக்கப்படும்.

(ஆ). விண்ணப்பதாரி பரீட்சை தோற்ற எதிர்பார்க்கும் மொழி மூலமே விண்ணப்ப படிவத்தை பூரணப்படுத்த வேண்டியதுடன், விண்ணப்ப பத்திரத்தை தயாரிக்கும் போது அதன் தலைப்பில் காணப்படும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்ப படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் தமிழில் தயாரிக்கப்படும் விண்ணப்ப படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் இடப்படல் வேண்டும்.

(இ). பரீட்சைக்காக சரியான முறையில் பூரணப்படுத்திய விண்ணப்ப படிவம் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் ..2017..11..29.. ம் திகதி அல்லது அதற்கு முன்பு கிடைக்க கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்ப பத்திரத்தையிட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தெளிவாக **"இலங்கை புகையிரத திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு - 02 சேவைப் பிரிவிற்கான புகையிரத தொழில் நுட்ப முகாமைத்துவ உதவியாளர்** பதவிக்கான திறந்த பயிற்சி காலத்திற்காக தகுதியானவர்களை தேர்ந்தெடுக்கும் போட்டிப் பரீட்சை -2017 " என **குறிப்பிடவும்** மற்றும் ஜேர்மன் புகையிரத தொழில் நுட்ப பயிற்சி நிலையத்தில் கற்ற பாநெறி மற்றும் வருடம் குறிப்பிடப்படல் வேண்டும். குறித்த தினத்திற்கு பின்பு கிடைக்கும் எந்த விண்ணப் படிவமும் ஏற்றுக் கொள்ள படமாட்டாது.

புகையிரத பொது முகாமையாளர்
**இலங்கை புகையிரத திணைக்களம்**
**நியமன கிளை**
**த.பெ இல 355**
**ஓல்கொட் மாவத்தை**
கொழும்பு - 10

(இ). விண்ணப்ப படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரச பாடசாலை பிரதானி/ ஓய்வூ பெற்ற அதிகாரி, பிரிவின் கிராம சேவை உத்தியோகத்தர், சமாதான நீதிவான், சத்தியப்பரமான ஆணையாளர் /சட்டத்தரணி / முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் / பொலிஸ் சேவையில் வர்த்தமாணியில் பிரசுரிக்கப்படும் பதவயை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது வருடத்திற்கு ரூபா 240360/- க்கு குறையாத ஒன்றினைந்த சம்பளத்தை பெறும் அரச சேவையில் நிரந்தர பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப் படல் வேண்டும்.

(ஈ).சகல வழிகளிலும் பூரணமற்ற விண்ணப்ப படிவம் நிராகரிக்கப்படும். தபாலிடும் போது விண்ணப்ப படிவம் காணாமல் போதல் அல்லது தாமதித்தல் போன்ற முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

(உ). விண்ணப்ப படிவம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது பற்றி குறிப்பிட்டு புகையிரத திணைக்கள வெப் தளத்தில் பிரசுரிக்கப்படும். அறிவித்தல பிரசுரிக்கப்பட்டு 02 அல்லது 03 நாட்களுக்கு

பின்பும் அனுமதி அட்டை கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்படப்பட்டுள்ள படி புகையிரத திணைக்களத்தின் புகையிரத பொது முகாமையாளர் காரியாலயத்திற்கு அறிவிக்க வேண்டும். அவ்வாறு அறிவிக்கும் போது விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் போன்றவற்றை குறிப்பிட வேண்டும் கொழும்புக்கு வெளியில் உள்ள விண்ணப்பதாரிகளாயின் தமது விபரத்துடன் தொலை நகல் மூலம் அனுமதி அட்டையின் பிரதியை அனுப்புவதற்காக வேண்டி விண்ணப்பதாரியின் தொலை நகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு வேண்டுகோள் கடிததத்தை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தொலை நகல் மூலம் புகையிரத திணைக்களத்திற்கு அனுப்பி விசாரித்தல் மிகவும் பயனுடையதாக இருக்கும். மேலும் புகையிரத திணைக்களத்தினால் கேட்கப்படும் தேவையான தகவல்களை உறுதி செய்வதற்காக வேண்டி விண்ணப்பதாரியினால் தம்மிடம் வைத்துக் கொண்ட விண்ணப்ப பத்திரத்தின் பிரதியை பரீட்சை கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் பிரதியையும் விண்ணப்ப பத்திரத்தை தபாலிடும் போது பதிவு செய்த பற்றுச் சீட்டையும் தயாராக வைத்துக் கொள்ளல் பிரயோசனமுடையதாக இருக்கும்.

(ஊ). எந்த விண்ணப்பதாரிக்கும் பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படாமல் அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகுதி பெற்றுள்ளார் என கருதப்பட மாட்டாது.

10. விண்ணப்பதாரியின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக வேண்டி பரீட்டை மேற்பார்வையாளரிடம் கீழ் குறிப்பிடப்படும் ஆவணங்களில் ஒன்றை முன் வைத்தல் வேண்டும்.

- ஆட்பதிவு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை
- செல்லுபடியாகும் கடவுச் சீட்டு

11. இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயங்கள் இருப்பின் அது சம்பந்தமாக புகையிரத முகாமையாளரினால் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரிகளும் இவ் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது சட்டதிட்டங்களின் படி செயற்பட வேண்டும். இதில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி அறிவித்தல்களுக்கிடையில் ஏதேனும் பொருந்தாத தன்மை நிலவுமிடத்து அவ்வாறான சந்தர்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலின் படி நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும்.

எஸ்.எம். அபேவிக்ரம
புகையிரத முகாமையாளர்

2017. ..............................ம் திகதி

224

# மாதிரி விண்ணப்ப படிவம்

காரியால பிரயோசனத்திற்காக

இலங்கை புகையிரத திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்ப பிரிவு -02 சேவைப் பிரிவிற்கான புகையிரத தொழில் நுட்ப முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கான திறந்த பயிற்சி காலத்திற்காக தகுதியானவர்களை தேர்ந்தெடுக்கும் போட்டிப் பரீட்சை -2017

Open Competitive Examination for Recruitment of trainees of Railway Management Assistants (Technical ) for Railway Management Assistant (Technical ) Service Category –Section -02 in Sri lanka Railway Department - 2017

1.0 மொழி மூலம்

பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலம்

சிங்களம் -2

தமிழ் -3

(குறித்த இலக்கத்தை அடைப்புக்கள் எழுதவும்.) விண்ணப் படிவத்தை பூரணப்படுத்தல் பரீட்சைக்கு தோற்றும் மொழி மூலமாகும்.

2.0 தனிப்பட்ட தகவலகள் :

2.1 முழுப் பெயர் ( ஆங்கில் கெப்பிட்டல் எழுத்தில்) ..........................................................
(உதாரணம் HEARATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

2.2 முதலெழுத்துக்களுடன் பெயர் :- ..........................................................
உதாரணம் GUNAWARDHANA H.M.S.K )

2.3 முழுப் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) ..........................................................

2.4 நிரந்தர முகவரி (ஆங்கில் கெப்பிட்டல் எழுத்தில்) அனுமதி அட்டை இம் முகவரிக்கு தபாலிடப்படும்) ..........................................................

2.5 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்)..........................................................

2.6 ஆண்/பெண் தன்மை ஆண் - 0 பெண் -1
(குறித்த இலக்கத்தை அடைப்புக்குள் எழுதவும்)

2.7 தேசிய அடையாள அட்டை இலக்கம் ..........................................................

2.8 சிவில் தன்மை :- தனியாள் -1 திருமணமானவர் -2
(குறித்த இலக்கத்தை அடைப்புக்குள் எழுதவும்)

2.9 இன தொகுதி (சிங்களம் -1,தமிழ்-2,இந்தியத் தமிழ்-3 முஸ்லிம்-4 வேறு-5)
(குறித்த இலக்கத்தை அடைப்புக்குள் எழுதவும்)

2.10 பிறந்த திகதி : வருடம் [ ] மாதம் [ ] திகதி [ ]

2.11 தகுதி பெறும் ......... தினம் வயது

வருடம் [ ] மாதம் [ ] திகதி [ ]

2.12 தொலைபேசி இலக்கம் :- [ ]

3.0 தராதரம்:-

3.1 கல்வித் தராதரம் க.பொ.த (சா/தரம்)

வருடம்........................... சுட்டென் ...........................

| இல | விடயம் | தராதரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |

கல்வித் தராதரம் க.பொ.த (உயர்/தரம்)

வருடம்........................... சுட்டென் ...........................

| இல | விடயம் | தராதரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

3.2 ஜேர்மன் புகையிரத தொழில்நுட்ப பயிற்சி நிறுவனத்தில் கற்ற பாடநெறி

தொழில் நுட்ப பாநெறியின் பெயர்
பாடநெறியின் காலம் · வருடம் [ ]

.................. இருந்து .................. வரை

3.0 கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டை ஒட்டவும்

பணம் வைப்புச் செய்த பற்றுச் சீட்டின் (மூலப்பிரதி) களன்றுவிடாதவாறு அதன் ஒரு ஓரத்தினால் இங்கு ஒட்டவும் (பணம் செலுத்திய பற்றுச் சீட்டின் புகைப்பட பிரதியை வைத்துக் கொள்ளவும்)

4.0 விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்துகை :-

இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் தனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் உண்மையானதெனவும், பரீட்சை கட்டணம் செலுத்திய இலக்கம் ............ திகதி ...... உடைய பணம் வைப்பு பத்திரத்தின் இங்கு ஒட்டப்பட்டுள்ளது என தெரிவிக்கிறேன். பரீட்சை சட்ட திட்டங்களுக்கு இணங்கி செயற்படுவதற்கும், இப் பரீட்சை சம்பந்தமான ஏற்பாடுகள் உள்ளடங்கிய சேவைத் திட்டத்தின் படி நான் தகுதியற்றவர் என தெரியவருமிடத்து பரீட்சைக்க முன்பு அல்லது நடக்கும் போது அல்லது அதன் பின்பு எனது பரீட்சை அபேட்சக

தன்மை இரத்துச் செய்யப்படும் என்பதற்கும் நான் இணங்கிக் கொள்கிறேன். மேலும் பரீட்சை நடாத்துதல் சம்பந்தமாக புகையிரதப் பொதுமுகாமையாளரினால் இடப்படும் சட்டதிட்டங்களுக்கும் நான் கீழ் படுவதாக தெரிவித்துக் கொள்கிறேன்.

திகதி ..........................

....................................
விண்ணபதாரியின் கையொப்பம்

6.0 விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல (வர்த்தமாணி அறிவித்தலின் 10(ஈ) உள்ளவாறு)

இவ்விண்ணப்பதை முன் வைக்கும் ((முழுப் பெயர்) திரு....................................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன். அவர் ................................ ம் திகதி மேலுள்ள கையொப்பத்தை என் முன்னிலையில் இட்டார் எனவும் உறுதிப்படுத்துகிறேன். மேலும் பரீட்சைக் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டு ஒட்டப்பட்டுள்ளது என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

....................................
உறுதிப்படுத்துபவரின்
கையொப்பம்

திகதி : .....................

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :-
........................................................................................................................
பதவி :.........................................................................................................
முகவரி: .......................................................................................................
(தயவு செய்து உத்தியோக இலட்சிணையை பொறிக்கவும்)

**திணைக்கள பிரதானியின் உறுதிப்படுத்துகை :-**

( அரச/ மாகாண அரச/ அரச கட்டுத்தாபன போன்றவற்றில் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்) .

இவ் விண்ணப்ப பத்திரத்தை முன் வைத்துள்ள திரு/திருமதி/செல்வி ................................................ அவர்கள் ............................................. திணைக்களத்தில்/அமைச்சில்/நிறுவனத்தில் ..................... ஆக சேவை புரிவதுடன், அவரின் விண்ணப்பபத்திரத்தை சிபார்சு செய்து முன் வைக்கிறேன். இப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் இந்நிறுவனத்திலிருந்து விடுவிக்க நடிவடிக்கை மேற்கொள்ள முடியும்.

................................................
திணைக்கள /நிறுவன பிரதானியின்
கையொப்பம்

திகதி : ...............................

உறுதிப்படுத்துபவரின் முழுப் பெயர் :- .......................................................
பதவி :.........................................................................................................
முகவரி: .......................................................................................................
(தயவு செய்து உத்தியோக இலட்சிணையை பொறிக்கவும்)